# பிரதமசெயலாளர் செயலகம்,வடக்குமாகாண சபை
# ප්‍රධානලේකම්කාර්යාලය,උතුරුපළාත්සභාව
# Chief Secretary's Secretariat, Northern Provincial Council

A9 வீதி,கைதடி,யாழ்ப்பாணம்.
A9 පාර,කයිදඩි,යාපනය.
A9 Road,Kaithady, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


My No: NP/09/BDT/04/19/CIR-BDT/2019 04.01.2019

பாதீட்டு சுற்றுநிருபக் கடித இல : **BDT/CL/01/2019**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்.

<u>செலவினத்திற்கான அங்கீகாரம் வழங்குதல்</u>

<u>இடைக்கால வாக்குப்பணக் கணக்கு -2019</u>

2019ஆம் வருடத்திற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும்வரை தற்பொழுது இடம்பெற்றுவரும் அரசாங்க சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும்வகையில் இடைக்கால வாக்குப்பணக் கணக்கொன்று பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வடமாகாண சபைக்கென தயாரிக்கப்பட்ட வாக்குப்பணக் கணக்கு விபரங்கள் கௌரவ ஆளுநர், வ.மா அவர்களால் அனுமதிக்கப்பட்டு குறித்த இடைக்கால வாக்குப்பணக் கணக்கின் கீழ் செலவிடுவதற்குரிய ஆணைப்பத்திரங்களிலும் கையொப்பமிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கொடுப்பனவு வவுச்சர்கள் மற்றும் ஏனைய ஆவணங்களில் அதிகார இலக்கம் பின்வருமாறு குறிப்பிடப்படல் வேண்டும்.

1. பொதுச்சேவைகள் தொடர்பாக – G/NPC/HG/OP இலக்க 31.12.2018 திகதியிடப்பட்ட பொது ஆணைப்பத்திரம்
2. முற்பணக்கணக்கு செயற்பாடுகள் தொடர்பாக – G/NPC/HG/OP இலக்க 31.12.2018 திகதியிடப்பட்ட முற்பண ஆணைப்பத்திரம்

இவ் இடைக்கால வாக்குப்பணக் கணக்கின் மூலம் 2018ம் ஆண்டுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத கையிலுள்ள சிட்டைகள் மற்றும் 2019ம் ஆண்டில் தொடர்வேலையாகச் செயற்படுத்த வேண்டிய அபிவிருத்தி வேலைகளுக்குச் செலவிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, 2019 ம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும் வரை புதிய ஆட்சேர்ப்பு, புதிய கொள்வனவுகள், வேலைகள், சேவைகள் மற்றும் கருத்திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள முடியாது என்பதைக் கவனத்திற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், ஒவ்வொரு செலவினத்தலைப்பிலும் குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம், கருத்திட்டத்தின் கீழ் 2019 ஏப்ரல் மாதம் 30ம் திகதி வரையான செலவினத்தினை மேற்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விரிவான செலவின மதிப்பீடொன்று தங்களுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.அதற்கமைவாக, குறித்த செலவினத் தலைப்புகள் மற்றும் அட்டவணைகள் தொடர்பில் இடைக்கால வாக்குப்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச செலவின எல்லையை விஞ்சாத வகையில் செயற்படுவதற்கு நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

அத்துடன், இடைக்கால வாக்குப்பணக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக 2019ம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலமொன்று சமர்ப்பிக்குமிடத்து, இவ் இடைக்கால வாக்குப் பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிதி ஏற்பாடுகளையும் அதில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்.

பிரதிகள்:

1. கௌரவ ஆளுநரின் செயலாளர், வட மாகாணம்.
2. பிரதிக் கணக்காய்வாளர் நாயகம், வட மாகாணம்.
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வட மாகாணம்.

(1–3) தகவலுக்காக